பக்கங்கள்: 09

காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 31 சனிக்கிழமை 16.08.2025 கதிர் 280

## இது ரகசியம் அல்ல!

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நேற்று காலை கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் உயிரிழந்தார். நோய்வாய்ப்பட்டு ☞2

# முத்துநகரில் சட்டச் சிக்கல் இல்லாத காணிகளை விடுவிப்பதற்கு முடிவாம்

முத்துநகரில் நீதிமன்ற உத்தரவுகள் அல்லது சட்ட சிக்கல்கள் இல்லாத அனைத்து நிலங்களையும் விவசாயிகள் விவசாயத்திற்கு பயடுத்துவதற்கு அனுமதிப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை - முத்து நகர் காணிப் பிரச்சினை குறித்து, பிரதி அமைச்சர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

முத்துநகர் நிலப்பிரச்சினை ஜூலை 29, 2025 அன்று அடிப்படையில் தீர்க்கப்பட்டுள்ளது. மாவட்ட செயலகம் முன் நடைபெற்ற போராட்டத்திற்கு முன்பே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நீதிமன்ற உத்தரவுகள் அல்லது சட்ட சிக்கல்கள் இல்லாத ☞2

# நிகழ்நிலை காப்புச் சட்டத்தை முழுமையாகவே நீக்குங்கள்

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தை உடனடியாக முற்றாக நீக்குமாறு வலியுறுத்தி சர்வதேச மன்னிப்புச்சபை தமது சமர்ப்பணங்களை நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தைத் திருத்துவது தொடர்பான குழுவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தை திருத்தியமைப்பது தொடர்பில் அவதானிப்புக்கள், கருத்துக்கள், பரிந்துரைகளை தமக்கு அனுப்பிவைக்குமாறு நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தைத் திருத்துவது தொடர்பான குழுவின் செயலாளர் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்கள் உள்ளடங்கலாக ☞2

# திங்கள் அடைப்புப் போராட்டத்திற்கு வடக்கில் பல அமைப்புகளும் ஆதரவு

### சில மட்டும் எதிர்ப்பு; தமிழ்க் கட்சிகள் மௌனம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அளவுக்கதிகமாகவுள்ள படையினரைக் குறைப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி, முத்துஐயன்கட்டுக் குளத்தில் உயிரிழந்த இளைஞரின் இறப்பை முன்வைத்து தமிழ் அரசுக்கட்சி அழைப்பு விடுத்துள்ள முழு அடைப்புப் போராட்டத்திற்கு வல்வேறு அமைப்புக்களும் ஆதரவு வழங்கியுள்ளன. அதேநேரம் ஒரு சில அமைப்புக்களும் தனிநபர்களும் அதற்கு எதிர்ப்பும் தெரிவித்துள்ளனனர்.

வவுனியா வடக்கு - நெடுங்கேணி வர்த்தகர் சங்கத்தினருடன் வவுனியா வடக்கு பிரதேசசபை தவிசாளர் கிருஷ்ணவேணி மற்றும் வவுனியா மாநகர முதல்வர் காண்டீபன் ஆகியோர் இந்தக் கடையடைப்புக்கு ஆதரவு கேட்டு நேற்றுப் பேசினர். கடையடைப்புக்கு தங்களுடைய முழு ஆதரவும் கிடைக்கும் என அவர்கள் உறுதியளித்துள்ளனர். ☞2

# மன்னார் காற்றாலைத் திட்டம் ஒரு மாதத்திற்கு இடைநிறுத்தம்

### வலுசக்தி அமைச்சர் தெரிவிப்பு

ஆளும்தரப்பு என்ற ரீதியில் மக்களின் உரிமைகளுக்கோ அல்லது சுற்றுச்சூழலுக்கோ பாதிப்பு ஏற்படும் எந்த ஒரு தீர்மானத்தையும் எடுக்க மாட்டோம். அந்த வகையிலேயே அரசுத் தலைவர் அநுரகுமாரவின் ஆலோசனைக்கமைய மன்னார் கற்றாலை மின் உற்பத்தி திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசதகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார்:

காற்றாலை மின் திட்டத்துக்குப் பொருத்தமான இடம் என்பதாலேயே மன்னார் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மன்னாரிலும் அதன் தீவுப் பகுதிகளிலும் ஒப்பந்தங்களுக்கு அமைய இவ்வாறான மின் உற்பத்தி திட்டங்கள் காலம் காலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கமைய அங்கு இரு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவற்றில் ஒன்று 20 மெகாவோல்ட் வேலைத் திட்டமாகும். மேலும் 50 ☞2

# மன்னார் காற்றாலை குறித்து ஆராய தனிக் குழு நியமனம்

### ஒரே வாரத்தில் அதன் பரிந்துரை

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஒருவாரத்துக்குள் இக்குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டே இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என மின் சக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசதகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பயன்பாட்டின் ஊடாக 70 சதவீத மின் உற்பத்தியை மேற்கொள்வதே எமது இலக்காகும். ☞2

# மட்டு. வர்த்தகர்களும் அடைப்புக்கு முழுமையான ஆதரவு தரவேண்டும்

### மாநகர முதல்வர் வலியுறுத்து

தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு- கிழக்கில் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ள முழு அடைப்புக்கு மட்டக்களப்பு மாநகரிலுள்ள வர்தகர்கள் ஆதரவு வழங்கவேண்டும் என மாநகரசபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டு மாநகரசபையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இந்தக் கோரிக்கையை விடுத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு -கிழக்கில் முன்னெடுத்துள்ள முழு அடைப்பு போராட்டம் ஓகஸ்ட் 18 திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. எனவே அன்றைய தினம் மாநகரிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடி ஆதரவு வழங்குமாறு கோருகிறேன். ☞2

# முல்லை. தேசிய இளைஞர் பேரவையும் கடையடைப்புப் போராட்டத்திற்கு ஆதரவு

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இளைஞனுக்கு நீதி கோரியும், வடக்கு கிழக்கில் அதிகரித்து காணப்படும் இராணுவ பிரசன்னத்தை நீக்கக்கோரியும் ஓகஸ்ட் அடைப்புப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை முழு ஆதரவை வழங்குகின்றது என அதன் பொதுச் செயலாளர் ஸ்டீவென்சன் அறிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், தமிழ்ப் ☞2

# மன்னார் காற்றாலைத் திட்டம் குறித்து இறுதி தீர்வு கிட்டும் வரை போராட்டம்

### மக்கள் உறுதியான முடிவு

மன்னாரில் இடம்பெறும் காற்றாலை, கனியமணல் செயற்றிட்டங்கள் தொடர்பில் உறுதியானதும் இறுதியானதுமான தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்து நேற்று 13 ஆவது நாளாகவும் மன்னார் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மன்னார் பிரதான சுற்றுவட்ட பகுதியில் மக்கள் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறும் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறும் 13 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக அண்மையில் இடம்பெற்ற அரசுத் தலைவர்யுடனான சந்திப்பில் காற்றாலை செயற்திட்டங்களை ஒரு மாத காலம் நிறுத்தி வைப்பதாக அரசுத் தலைவர்யினால் வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் உறுதியான முடிவு வரும் வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லையென போராட்டகாரர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாகவே கடந்த வாரம் போராட்டம் இடம்பெற்ற நிலையில் ஒரு வாரகாலம் காற்றாலை செயற்திட்டத்தை நிறுத்தி வைப்பதாக எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்திருந்தார்.

எனினும் அவரது வாக்குறுதி ☞2

# திருடர்களின் படங்களை நல்லூரில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை

### 600 பொலிஸாரும் கடமையில்

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பொலிஸாரால் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் 600 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்றும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் ☞6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சிகிச்சை பெற்று வந்த அவர், தனது 57வயதில் காலமானார். அதில் குறிப்பிட்டுச் சொல்ல என்ன இருக்கின்றது என்கிறீர்களா? விடயம் இருக்கின்றது, அவர் தமிழ் அரசியல் கைதிகளை சிறையில் முழந்தாளிட வைத்து அவர்களின் தலையில் துப்பாக்கியை வைத்து உங்களைக் கொல்லவும் என்னால் முடியும் என்று தனது நண்பிகளுக்கு முன்னாள் வீரப் பிரதாபப் படம் காட்டிய வழக்கின் தீர்ப்பு வரவிருந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்சவின் பதவிக் காலத்தில் அவர் இத்தகைய அசிங்கமான செயலைச் செய்தார். அதனால் அவரிடமிருந்து ஒப்புக்கு சிறைத்துறை அமைச்சு மட்டும் மீளப் பெறப்பட்டது. ஏனைய வகைகளில் அவர் இராஜாங்க அமைச்சராகவே தொடர்ந்தார். ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவரான சமயத்தில் இந்தச் குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியிலும் அவருக்கு மீண்டும் இராஜாங்க அமைச்சர் பதவி கொடுத்தார்.

சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவரும் சந்திரிகாவின் மாமனாருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தேவின் மூத்த மகன்தான் லொஹான். தனது தந்தையின் முன்மாதிரியைப் பின்பற்றி அரசியலில் நுழைந்து 2009 இல் மத்திய மாகாண சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2010 பொதுத் தேர்தலில் முதன்முறையாக நாடாளுமன்றத்தில் நுழைந்த அவர், 2012 இல் இலங்கை சுதந்திரக் கட்சியின் பாததும்பர தொகுதி அமைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த அவர், 2015 மற்றும் 2020 நாடாளுமன்றத் தேர்தல்களிலும் மீண்டும் வெற்றி பெற்றார்.

கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் சிறைச்சாலை சீர்திருத்தம், கைதிகள் மறுவாழ்வு, இரத்தினக்கற்கள் மற்றும் நகைகள் துறை இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த இவர், 2024 ஆம் ஆண்டு பெருந்தோட்டத் தொழில்கள் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

கடந்த அரசுத் தலைவர் தேர்தலில், சிறீலங்கா பொது ஜன பெரமுனவின் ஒரு குழு நாமல் ராஜபக்சவையும், மற்றொரு குழு ரணில் விக்கிரமசிங்கவையும் ஆதரிக்க முன்வந்தபோது லொஹான் ரத்வத்தே ரணிலின் பக்கம் இணைந்தார்.

அரசுத் தலைவர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் தோல்விக்குப் பிறகு, லொஹான் ரத்வத்தே 2024 பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை, சிறிது காலம் தீவிர அரசியலில் இருந்து விலகியிருந்தார். பின்னர், அவர் மீண்டும் பொது ஜன பெரமுனவில் இணைந்தார், மேலும் அவர் நோய்வாய்ப்படும் வரை கட்சியின் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

**சிறைச்சாலையில் நடந்தது என்ன?**

2021 செம்டெம்பர் 12 அன்று அநுராதபுரம் சிறைச்சாலைக்குத் தனது சகாக்களுடன் சென்ற சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு ராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தமிழ் அரசியல் கைதியை முழந்தாளிடச் செய்து, அவரது தலையில் தனது கைத் துப்பாக்கியை வைத்து மிரட்டினார்.

இந்த சம்பவம் இரவு வேளையில் இடம்பெற்றதாக கைதிகள் குற்றஞ்சாட்டினர். அப்போது அமைச்சரும் அவருடன் இருந்தவர்களும் நிறைபோதையில் இருந்தனர் என்ற குற்றச்சாட்டும் இருந்தது.

தனது தனிப்பட்ட துப்பாக்கியை காண்பித்து, தமிழ் அரசியல் கைதிகளை கொலை செய்யவும் தனக்கு உரிமையுள்ளதாக அவர் தெரிவித்திருந்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மிக நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் விடுதலைப் புலிகள் என்ற வகையிலேயே அமைச்சரால் இவ்வாறு நடத்தப்பட்டனர். இந்தத் தகவல் வெளியாகி (அதனை முதலில் வெளிப்படுத்தியவர் கஜேந்திரகுமார்) அனைத்துத் தரப்பினரதும் கண்டனங்களும் தீவிரமாகியதும் அப்போது இத்தாலியில் இருந்த பிரதமரான மஹிந்த ராஜபக்ஷ, தொலைபேசியூடாக லொஹான் ரத்வத்தவை தொடர்புக் கொண்டு, பதவி விலகுமாறு வலியுறுத்தியுள்ளார்.

அதன் பின்னர் லொஹான் ரத்வத்த, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிற்கு, தனது சிறைத்துறைக்கான தனது பதவி விலகல் கடிதத்தை இன்று அனுப்பியிருந்தார். வெலிகடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலை வளாகத்தில் தன்னால் நடத்தப்பட்ட சம்பவத்திற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு ராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து லொஹான் ரத்வத்த பதவி விலகினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்தது.

பதவி விலகினாலும்கூட அமைச்சரால் மிரட்டப்பட்ட அரசியல் கைதிகள் உயர் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்தனர். 8 கைதிகள் அந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர். அந்த வழக்கின் தீர்ப்பு வரவிருந்த நிலையில் லொஹான் உயிரிழந்திருக்கிறார்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## திங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முழு அடைப்புப் போராட்டத்திற்கு சிறி ரெலோ கட்சியும் தனது முழு ஆதரவு தெரிவித்துள்ளது. இது தொடர்பாகக் கட்சியின் செயலாளர் நாயகம் உதயராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு கிழக்கில் தொடர்ந்து இடம்பெறும் அரச அடக்குமுறை மற்றும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு எதிரான அநீதிகளை ஆட்சேபித்து அவற்றுக்கு எமது எதிர்ப்பைக் காட்டவும் , வடக்கு - கிழக்கு தமிழரின் பூர்வீக நிலங்களில் எமக்கான உரிமைகளை நாமே பெற்றுக்கொள்ளவும், இந்த அரசிற்கு கடும் கண்டனத்தை தெளிவாகவும் எமது தமிழர்களின் அபிலாசைகளை எடுத்துக்காட்டவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பூரண முழு அடைப்புக்கு சிறி தமிழீழ விடுதலை இயக்கமாகிய நாங்கள் முழு ஆதரவையும் வழங்குவதற்கு தயாராக உள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கமும் திங்கள் நடைபெறும் முழு அடைப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இந்தச் சங்கத்தினருடன் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் நேற்று கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். தாம் கூடிப் பேசிய பின்னர் இது தொடர்பில் பதிலளிப்பதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் நேற்று மாலை வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கத்தினரால் பொதுவான மக்கள் நலன்சார் விடயம் என்ற வகையில் தாம் முழு அடைப்புக்கு முழு ஒத்துழைப்பு நல்குவதாக அறிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட உள்ளூர் விளை பொருள் விற்பனையாளர் சங்கமும் திங்கள் நடைபெறும் கடையடைப்புக்கு முழு ஆதரவு தெரிவித்துள்ளது. வவுனியா மாவட்ட உள்ளூர் விளை பொருள் விற்பனையாளர் சங்கத்தினரை சந்தித்து கடையடைப்புக்கு ஆதரவு கோரி நேற்றைய தினம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போது கடையடைப்புக்கு தாம் முழு ஆதரவு தருவார்கள் என சங்கத்தினர் உறுதியளித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா வர்த்தகர் சங்கம் மட்டும் தாம் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என்று அறிவித்து தமிழர் விரோதப் போக்கை வெளிப்படுத்தியுள்ளது. தமது நிர்வாக சபைக் கூட்டத்தில் போராட்டத்திற்கு ஆதரவு கிடைக்கவில்லை என்று சங்கத்தின் தலைவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அதுபோன்றே சிவசேனை என்கிற அமைப்பின் தலைவரான மறவன்புலவு சச்சிதானந்தன் என்பவரும் இந்தப் போராட்டம் அவசியமற்றது என்று தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், இந்தப் போராட்டத்தை சைவர்களும் தமிழ் மக்களும் புறக்கணிக்கவேண்டும் என்று அவர் மதத் தீவிரவாதத்தைக் கக்கியுள்ளார்.

தமிழ் மக்களின் விவகாரங்களில் ஒற்றுமையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் தமிழ்க் கட்சிகள் இந்தப் போராட்டத்திற்கு இதுவரையில் வெளிப்படையான ஆதரவு வழங்கவில்லை. ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் இந்தப் போராட்டம் முற்றியலும் நியாயமானது, அதனால் நாங்கள் அதனை எதிர்க்கப்போவதில்லை என்று தெரிவித்திருக்கிறார். அதேநேரம் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருக்கும் நபர் நியாயமற்றவர், மக்களால் நிராகரிக்கப்பட்டவர் என்றும் தெரிவித்திருக்கிறார். ஏனைய கட்சிகளிடம் இருந்து இந்தப் போராட்டம் தொடர்பில் கருத்துக்கள் எவையும் வெளிப்படுத்தப்படவில்லை.

## முல்லை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் மக்கள் அனைவரும் இப்போராட்டத்தின் கனதியை கருத்தில் கொண்டு, தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட தொடர் அநீதிகளை சர்வதேச கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையிலும் இடம்பெறவுள்ள இப்போராட்டத்திற்கு ஆதரவை வழங்குமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம். என அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முத்துநகரில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து நிலங்களையும் விவசாயிகள் விவசாயத்திற்கு பயன்படுத்த அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த நிலத்தில் சுமார் 10% சூரிய சக்தி நிறுவனங்கள் வேலை செய்யத் தொடங்கிய இடமாகும். அந்தப் பகுதிகளை மட்டுமே பயன்படுத்த முடியாது,

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி வழங்கவும், நிலங்களை திருப்பித் தரவும் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டதாக அறிந்த, ஒரு குழு இன்னும் மக்களை தவறாக வழிநடத்த முயற்சிப்பதாகவும், அவர்களின் நோக்கம் பிரச்சினையைத் தீர்ப்பது அல்ல, நாட்டில் ஸ்திரமின்மையை உருவாக்குவதாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் காற்றாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனடிப்படையில் 5 வருடங்களுக்குள் அதாவது 2030ஆம் ஆண்டாகும் போது மின் கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

இந்த இலக்கை அடைவதற்கு மீள் புதுப்பிக்கத்தக்க வலு சக்தியை மிகக் குறைந்த செலவில் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமானதாகும். அதற்கமைய மூன்று பிரதான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறான வேலைத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் ஸ்திரத்தன்மை ஆகியவையே அந்த மூன்று பிரதான காரணிகள் ஆகும். இவை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை கிடைத்த பின்னரே வேலை திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அரசுத் தலைவர்யுடனான கலந்துரையாடலின் பின்னர் இது தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவில் சுற்றாடல் அமைச்சன் அதிகாரிகள், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், மத்திய சுற்றாடல் அதிகார சபை, நீர் வழங்கள் வடிகால் அமைப்பு அதிகார சபை, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், புவி சரிதவியல் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுவுக்கு ஒரு வாரம் காலம் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்தவாரம் இக்குழுவுடனான முதலாவது கூட்டம் இடம்பெற உள்ளது. ஒரு வாரத்துக்குள் பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகள் மற்றும் அந்த தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் அதற்கு எடுக்கும் காலம் என்பவற்றை பரிந்துரைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வேலைத்திட்டம் தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என்றார்.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்படாமல் நள்ளிரவு நேரங்களில் காற்றாலை செயற்திட்டங்களுக்கான உதிரிபாகங்கள் மன்னார் நகருக்குள் மக்களின் எதிர்ப்பை மீறியும் கொண்டு செல்லப்பட்டது.

இந்த பின்னனியிலேயே ஜனதிபதியின் வாக்குறுதியிலும் நம்பிக்கையற்ற தன்மையே காணப்படுவதன் அடிப்படையில் மக்கள் தொடர்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கில் இராணுவத்தினரின் அடாவடித்தனம் காரணமாக மக்களின் நாளாந்த வாழ்வியல் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அண்மையில் இளைஞர் ஒருவர் இராணுவத்தால் தாக்கப்பட்டு, அவர் உயிர்பறிக்கப்பட்டு, அந்த குடும்பம் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எனவே தமிழர் தாயகத்தில் காரணம் இன்றி இருக்கின்ற இராணுவமுகாங்கள் அகற்றப்படவேண்டும் என பல்வேறுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் அவை அகற்றப்படாமல் உள்ளன. எனவே தமிழ் மக்களுக்கான நீதி வேண்டி இந்த இராணுவமுகாங்களை அகற்றி கோரி முழு அடைப்பு இடம்பெறவுள்ளது.

ஆகவே மாநகரத்திலுள்ள கடை வியாபாரிகள் அன்றைய தினம் தங்களது கடைகளை மூடி இந்த போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு மாநகர முதல்வர் என்ற வகையில் கோரி நிற்கின்றேன்- என்றார்.

## நிகழ்நிலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அக்குழுவின் செயலாளரால் விடுக்கப்பட்டுள்ள பொது அறிவித்தலில் நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தைத் திருத்துதல் தொடர்பான யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை செயலாளர், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரிக்கோ அல்லது டநபயடளூஅழத.பழஎ.டம என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகவோ அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இவ்வறிவிப்பு வெளியானதன் பின்னர் இதுகுறித்து சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப்பிராந்திய அலுவலகத்துக்கான உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் பதிவொன்று செய்யப்பட்டுள்ளது.

அப்பதிவில் '2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தைத் திருத்திய மைப்பதற்கான பரிந்துரைகளை அனுப்பி வைக்குமாறு இலங்கை அரசாங்கத்தினால் பொது அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டிருக்கும் நிலையில், அச்சட்டத்தை உடனடியாக முற்றாக நீக்குமாறு வலியுறுத்தி நாம் எமது நிலைப்பாட்டை அனுப்பிவைத்துள்ளோம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வலுசக்தி அமைச்சர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெகாவோல்ட் திட்டத்துக்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இவற்றுக்கு முன்னர் 250 மெகாவோல்ட் மின் உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதானி நிறுவனத்துடன் இந்த வேலை திட்டத்துக்கான உடன்பாடு எட்டப்பட்டிருந்தது.

எவ்வாறிருப்பினும் தற்போது இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது. குறித்த பிரதேசத்தில் ஆயிரம் மெகாவாட் வரை மின் உற்பத்தி திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான இயலுமை காணப்படுகிறது. கடற் பகுதிகள் அல்லாமல் நிலப்பரப்புகளில் மாத்திரம் ஆயிரம் மெகாவோல்ட் மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியும். இங்கு முன்னெடுக்கப்படும் வேலை திட்டங்கள் அபிவிருத்திகளை அடிப்படையாகக் கொண்டே இடம் பெறுகின்றன.

20 மெகாவோல்ட் மின் உற்பத்தி வேலை திட்டத்துக்கான பொருட்கள் போக்குவரத்து தொடர்பிலேயே எதிர்ப்புகள் வெளியாகி உள்ளன. இது தொடர்பில் அப்பிரதேச மததலைவர்கள் உள்ளிட்ட முக்கிய தரப்பினருடனும் கடந்த வாரம் அரசுத் தலைவருடனும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. அதற்கமையவே ஒரு மாத காலத்துக்கு அந்த திட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

ஆளும்தரப்பு என்ற ரீதியில் மக்களின் உரிமைகளுக்கோ அல்லது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் எந்த ஒரு தீர்மானத்தையும் எடுக்க மாட்டோம் என உறுதியாக குறிப்பிடுகின்றேன் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய முதலாளிகளும் அரசியல்வாதிகளும் அங்குள்ள அப்பாவி மீனவரை ஏமாற்றுகின்றனர்

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கம் கண்டனம்

இந்திய மீன்பிடி முதலாளிகளும், அரசியல்வாதிகளும் தமக்குச்சாதகமாகதிசைதிருப்பி அப்பாவி இந்திய மீனவர்களை ஏமாற்றுகின்றனர். ஆகவே உண்மையை உணர்ந்து போராட்டத்தை கைவிட வேண்டும் என்று யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள சம்மேளன அலுவலகத்தில் நேற்றையதினம் ஊடக சந்திப்பொன்றை நடாத்தி இதனைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்துள்ளதாவது,

தொப்பிள்க் கொடி உறவென்று கூறிக்கொண்டு எமது வடக்கின் கடல் வளங்களை சூரையாடுவதை கூலிக்காக கடலில் இறங்கும் தமிழகக் கடற்றொழிலாளர்கள் கைவிட வேண்டும் .

இலங்கையின் எல்லைக்குள் வந்து கடல் வளங்களை சூரையாடிய குற்றங்களுக்காகவே தமிழக மீன்பிடியாளர்கள் இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது இலங்கையின் இறைமையுடன் கூடிய விடயம். இதை தமிழகத்தில் போராட்டங்களை முன்னெடுக்கும் தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் குறித்த விடயத்தை இந்திய மீன்பிடி முதலாளிகளும், அரசியல் வாதிகளும் தமக்கு சாதகமாக திசை திருப்பி அப்பாவி இந்திய கடற்தொழிலாளர்களை ஏமாற்றுகின்றனர். ஆகவே உண்மையை உணர்ந்து போராட்டத்தை கைவிட வேண்டும் என்றார்.

இதனிடையே யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் நிர்வாக உறுப்பினர் பாக்கியநாதன் றீகன் தெரிவிக்கையில்,

இந்திய இழுவை மடி படகுகள் சட்டவிரோதமாக தொழிலில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும். இலங்கை இறைமையுள்ள நாடு. எமது நாட்டுக்கென்று சட்ட எல்லை வரையறைகளும் இருக்கின்றது. அதுமட்டுமல்லாது இன்றைய ஆட்சியிலும் நாடு வலுவான பாதுகாப்புடன் தான் இருக்கின்றது.

எமது நட்டின் வரையறைகளை மீறினால் எமது நாடு சட்டத்தின் படியே முயற்சிகளை எடுக்கும். இதனால் பாதிக்கப்படுவது அப்பாவி இந்திய மீன்பிடியாளர்கள் தான். ஒருபோதும் சட்டவிரோத தொழிலுக்கு அனுப்பும் பண முதலைகளும், அரசியல் பினாமிகளும் பாதிக்கப்படப் போவதில்லை.

ஆகவே தொப்பிள்க்கொடி உறவென்று கூறிக்கொண்டு எமது வடக்கின் கடல் வளங்களை சூரையாடுவதை கூலிக்காக கடலில் இறங்கும் தமிழகக் கடற்றொழிலாளர்கள் கைவிட வேண்டும் என்றார்.

# வவுனியா வனவள திணைக்களத்தினால் மாவட்டத்தில் விவசாயிகள் அச்சத்தில்

## விவசாய சம்மேளனத் தலைவர் சுட்டிக்காட்டு

வவுனியா மாவட்டத்தில் வனவளத்திணைக்களத்தின் அண்மைய செயற்ப்பாடுகளால் விவசாயிகள் அச்சநிலையில் இருக்கின்றனர் என வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் பிரான்சிஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்ட காணிகள் விடுவிக்கப்படும் என்று ஆளும்தரப்பு அறிவித்தாலும் வவுனியாவை பொறுத்தவரை அவ்வாறு எந்தக் காணியும் விடுவிக்கப்படவில்லை என்றே கூறவேண்டும்.

அத்துடன் நீண்டகாலமாக பராமரிக்கப்படாத காணிகள் இனிமேல் மக்களுக்கு கிடைக்காது என்றும் ஆளும்தரப்பு அறிவித்துள்ளது. இதனால் பொதுமக்கள் காடுகளாக இருக்கும் தமது காணிகளை துப்பரவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். வனவளத் திணைக்களம் அதற்குத் தடை போடுகின்றது. அவ்வாறு செய்பவர்களையும் கைது செய்கின்றது.

இந்த நிலை தொடர்ந்தால் எவ்வாறு மக்கள் தமது காணிகளை துப்புரவாக்குவது? இதனால் விவசாயிகளும், மக்களும் அச்சநிலையில் உள்ளனர்.

இதற்கு ஒரு நீதியான முடிவை ஆளும்தரப்பு வழங்கவேண்டும். சில காணிகளுக்குள் கிணறுகள் உள்ளன. அவ்வாறான காணிகளையும் புனரமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 30 வருடங்களாக இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் தமது சொந்த இடங்களுக்கு மீளத்திரும்பவில்லை. அவர்களது வீடுகளை மூடி காடுகள் வளர்ந்துள்ளன.

அந்த காணிகள் தொடர்பாக கிராம அலுவலர்கள் உறுதிப்படுத்தி கடிதம் வழங்கினாலும் வனவளத் திணைக்களம் அதனை ஏற்க்க மறுக்கின்றது.

பலர் காணிகளுக்கான அனுமதிபத்திரத்தையும் வைத்துள்ளனர். ஆனால் அது செல்லுபடியாகாது என்று கூறுகின்றனர். இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது எனவே இதற்கு ஆளும்தரப்பு நல்லதொரு தீர்வை வழங்கவேண்டும். எனத் தெரிவித்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கண்துடைப்பு நடவடிக்கை வேண்டாம்

மன்னாரில் காற்றாலைகள் அமைக்கும் பணிகள், அரசுத் தலைவரின் உத்தரவின் பேரில் ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதனுடன், இந்தத் திட்டம் குறித்த ஆய்விற்காகத் தனிக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

காற்றாலை மின் உற்பத்தி என்பது, உலகளவில் சுத்தமான, புதுப்பிக்கத்தக்க, சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சார ஆதாரமாக பாராட்டப்படும் ஒன்றாகும். எரிபொருள் சார்ந்த மின்நிலையங்களால் ஏற்படும் மாசுபாடு, வெப்பமண்டல மாற்றம், கரியமில வாயு (கார்பன்) உமிழ்வு போன்ற பாதிப்புகளை தவிர்க்கும் ஒரு நவீன மாற்று வழி என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், மன்னாரில் இந்தத் திட்டம் எதிர்ப்புக்கு உள்ளாகியிருப்பதன் காரணம், காற்றாலை என்ற தொழில்நுட்பம் அல்ல – அதை அமைக்கும் இடமும் நடைமுறையும்தான். மக்களின் குடியிருப்புகள், வாழ்வாதாரப் பகுதிகள், மீன்பிடித் தளங்கள், மற்றும் இயற்கை உயிரியல் வளங்கள் மிக நெருக்கமாக இருக்கும் இடங்களில் காற்றாலைகளை நிறுவுவது, அங்குள்ள மக்களின் வாழ்வையும் சுற்றுச்சூழல் சமநிலையையும் பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்தும்.

மன்னார் என்பது வெறும் புவியியல் பரப்பல்ல. அது, பல்லாண்டுகளாக மீன்பிடி, விவசாயம், மற்றும் உப்பு உற்பத்தி போன்ற தொழில்களால் வாழும் மக்களின் வாழ்விடமும் வாழ்வாதாரத் தளமும் ஆகும். இங்கு பெரிய அளவில் காற்றாலைத் திட்டம் செயல்படுத்தும் போது,

ஒலிமாசு (Noise pollution), பறவைகளின் இடமாற்ற பாதைகள் பாதிப்பு, நில உரிமைகள் மீறல், மீன்பிடித் தொழிலுக்கு இடையூறு, நிலப்பரப்பு பயன்பாட்டின் மாற்றம், இவற்றால் மக்கள் தங்கள் சொந்த நிலங்களிலிருந்தே அப்புறப்படுத்தப்பட வேண்டிய நிலை ஏற்படும் என்ற அச்சம் நிலவுகிறது.

இந்தத் திட்டங்கள், பெரும்பாலும் மத்திய அரசின் வருவாய் ஈட்டும் திட்டங்களாகக் கருதப்படுகின்றன. வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்போதும், அந்த ஒப்பந்தங்களின் நிபந்தனைகள், திட்ட வரைபடங்கள், மக்களின் நில உரிமைகள் குறித்த விளக்கங்கள், மிகவும் குறைந்த அளவில் மட்டுமே உள்ளூர்வாசிகளிடம் பகிரப்படுகின்றன. இதனால் மக்களுக்கு, 'இந்தத் திட்டம் எங்களைப் புறக்கணித்து, நம்முடைய நிலத்தை பறிக்க வருகிறதா?' என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

கடந்த கால அனுபவங்களும் மக்களை எச்சரிக்க வைக்கின்றன. பெரிய அளவிலான 'அபிவிருத்தி' என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள், வடக்கு மற்றும் கிழக்கில் பல இடங்களில் மக்களை வலுக்கட்டாய இடம்பெயர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளன. நிலம் பறிமுதல், சுற்றுச்சூழல் பாதிப்பு, மற்றும் வாழ்வாதார இழப்பு ஆகியவை மக்கள் நினைவில் இன்னும் பசுமையாக உள்ளன.

மன்னாரில் காற்றாலைத் திட்டம், அரசும் மக்களும் எதிர்மறை நிலைப்பாட்டில் இருந்தால் வெற்றியடையாது. திட்டத்தை நிறைவேற்ற அரசின் நோக்கம் உண்மையில் சுத்தமான மின்சாரம் உற்பத்தி மற்றும் நிலையான அபிவிருத்தி என்றால், முதலில் மக்களின் நம்பிக்கையைப் பெறும் முயற்சி முன்னுரிமையாக இருக்க வேண்டும்.

முழு வெளிப்படைத்தன்மை – திட்டத்தின் பரிமாணம், இடங்கள், நிபந்தனைகள், முதலீட்டாளர் விவரங்கள், மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் பற்றிய முழுமையான தகவல் பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) – தன்னிச்சையான மற்றும் சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப செய்யப்பட வேண்டும்; அதன் அறிக்கை பொதுமக்களுக்கு திறந்துவைக்கப்பட வேண்டும்.

மக்கள் ஆலோசனை கூட்டங்கள்– பாதிக்கப்படக்கூடிய கிராமங்களில் நேரடியாக நடத்தி, மக்களின் கேள்விகளுக்கும் அச்சங்களுக்கும் பதில் அளிக்க வேண்டும்.

சீர்திருத்த நிபந்தனைகள் – மக்களின் நில உரிமைகளை பாதுகாக்கும் சட்ட உத்தரவுகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான இழப்பீடுகள், வேலை வாய்ப்புகள் ஆகியவை திட்டத்தின் ஒரு பகுதியாக உறுதி செய்யப்பட வேண்டும்.

துரதிருஷ்டவசமாக, அரசின் சில திட்டங்கள் எதிர்ப்பை சந்திக்கும்போது, அவற்றை அடக்கி நிறைவேற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், மன்னாரில் நிலைமை வேறுபட்டது. இங்கு மக்களின் எதிர்ப்பு, அவர்களின் வாழ்வாதாரத்தையும் சுற்றுச்சூழலையும் காப்பாற்றும் நோக்கத்தில் உள்ளது.

அவர்களின்குரலைஅடக்கி,திட்டத்தைவலுக்கட்டாயமாகமுன்னெடுத்தால், அது சமூக விரோதத்தையும் நீண்டகால விரிசலையும் ஏற்படுத்தும். மாறாக, மக்களுடன் இணைந்து, அவர்களின் தேவைகளையும் அச்சங்களையும் மதித்து, 'கூட்டு தீர்வுகள்' உருவாக்கினால், திட்டம் எதிர்ப்பில்லாமல் முன்னேற முடியும்.

காற்றாலை மின் உற்பத்தி மன்னாரில் வெற்றியடையவது மக்களை ஒதுக்கி அல்ல, மக்களோடு சேர்ந்து நடைபெறவேண்டும். உலகின் பல நாடுகளில், உள்ளூர் சமூகங்களுக்கு திட்ட பங்குகளை வழங்கி, அவர்கள் வருமானப் பயனில் பங்கெடுக்கும் வகையில் திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன. மன்னாரிலும் இதைப் பின்பற்றலாம்.

இன்று ஒரு மாத இடைநிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அரசு அந்த நேரத்தை உண்மையான ஆலோசனைகளுக்கும் திருத்த நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தவேண்டும். மக்களின் நம்பிக்கையைப் பெறுவது, திட்ட வெற்றிக்கான அடிப்படை. நம்பிக்கை இன்றி எந்த அபிவிருத்தித் திட்டமும் நீண்ட காலம் நிலைத்து நிற்காது.

முடிவாக, காற்றாலை மின் உற்பத்தி, நாட்டின் எதிர்கால சக்தி பாதுகாப்புக்கு அவசியமானதுதான். ஆனால், அது மன்னார் மக்களின் நிலங்களையும் வாழ்க்கையையும் பறிக்கும் விலைக்கு வந்தால், அது வளர்ச்சி அல்ல அநீதி. எனவே, அரசு, 'எப்படியும் முடிக்கவேண்டும்' என்ற போக்கிலிருந்து விலகி, 'எல்லோருக்கும் நியாயமான தீர்வை காண வேண்டும்' என்ற பாதையில் நடக்க வேண்டும்.

# இரத்தினக் கல் ஆபரண சந்தையை வெற்றிகொள்ள புதிய கொள்கைகள்

## பிரதமர் ஹரினி அறிவிப்பு

இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் தொடர்பில் சர்வதேசப் புகழ் பெற்றிருந்த போதிலும் எதிர்பார்த்த அளவிற்கு அதன் ஏற்றுமதி வளர்ச்சி அடையவில்லை. எனவே சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணச் சந்தையை வெற்றி கொள்ளும் வகையில் நிலையான கொள்கைகளை வகுக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும் என பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையை சர்வதேசத்திற்கு எடுத்துச் செல்லும் நோக்குடன் **'Gem City Ratnapura- 2025'** எனும் தலைப்பில் நேற்று, இன்று மற்றும் நாளை ஆகிய மூன்று நாட்கள் பெல்மடுல்ல கிராண்ட் சில்வரே விடுதியில் நடைபெறும் சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சி 2025-இன் தொடக்கவிழாவில் உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் இக்கண்காட்சியில் கலந்து கொண்டிருக்கும் அமெரிக்கா இந்தியா சீனா சுவிட்சர்லாந்து தாய்லாந்து பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகளுக்கு நன்றி தெரிவித்த பிரதமர், அரசாங்கத்தின் கொள்கைகளில் நம்பிக்கை வைத்து எதிர்காலத்திலும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையின் ஏற்றுமதி நடவடிக்கைகளில் இணைந்து கொள்ளுமாறு அந்நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி இலங்கையை உலகின் முன்னணி இரத்தினக்கல்மற்றும்ஆபரணச்சந்தையாக நிலைநிறுத்தும் நோக்குடன் பல்வேறு வகையான இரத்தினக்கற்கள் ஆபரணங்கள் அகழ்வு மற்றும் பதப்படுத்தும் முறைகள் ஆய்வக சேவைகள் களப்பயிற்சி மற்றும் கல்வி வாய்ப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அங்கு பிரதமர் மேலும் கூறியதாவது:

இலங்கை இரத்தினக்கற்கள் உலகெங்கிலும்பிரசித்திபெற்றிருக்கின்றனஅத்துடன் இந்த இரத்தினக்கற்களில் பெரும் பகுதி இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்தே கிடைக்கின்றன.எனினும்இரத்தினபுரிக்கு அந்த கௌரவம் கிடைத்துள்ளதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உயர்தர இரத்தினக்கற்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினக்கல் துறை தேசிய பொருளாதாரத்திற்கு அளிக்கும் பங்களிப்பு மிகப் பெரியது.

இருப்பினும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையிலிருந்துஉள்ளூர்ஏற்றுமதி வருமானத்திற்கு நாம் அளிக்கக்கூடிய உச்சபட்சபங்களிப்பினைஇன்னும்அடையவில்லை.பொருத்தமற்ற கொள்கைகளே இத்துறையின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்து வருகின்றன. ஆகையால் இரத்தினக்கல்துறையின் இலக்கு ஏற்றுமதி வருமானத்தை ஈட்டத் தேவையான நிலையான கொள்கைகளை உருவாக்க எமது ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் செயல்படும் என்றார்.

# மன்னார் மக்களின் போராட்டத்திற்கு முஸ்லிம்கள் நேற்று திரண்டு ஆதரவு




மன்னார் மாவட்டத்தில் இடம் பெறும் காற்றாலைகள் மற்றும் கனிய மணல் அகழ்வு உள்ளிட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் உறுதியான தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என தெரிவித்து 13ஆவது நாளாக நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று மதியம் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மன்னார் முஸ்லிம் மக்களும் அதில் கலந்து கொண்டனர்.

வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையின் பின்னர் முஸ்லிம் மக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு போராட்டத்திற்கு தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

மன்னார் நகர பிரதான சுற்றுவட்ட பகுதியில் 13 ஆவது நாளாக மக்களினால் இந்தப் போராட்டம் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அண்மையில் இடம்பெற்ற அரசுத் தலைவருடனான சந்திப்பில் காற்றாலை செயற்திட்டங்களை ஒரு மாத காலம் நிறுத்தி வைப்பதாக அரசுத் தலைவரால் வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் உறுதியான முடிவு வரும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என போராட்டகாரர்கள் தெரிவித்துள்ளனர்.

# தான்தோன்றி அரசியல்

## என். சத்திய மூர்த்தி

தமிழர்பகுதிகளில்இராணுவத்தின்வன்முறைதொடர்வதாக குற்றஞ்சாட்டி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், நேற்று, வெள்ளிகிழமை, ஒகஸ்ட் 15 அன்று, தமிழ் அரசுக் கட்சி முழு கடை அடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. இந்த அறிவிப்பை கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் கொழும்புவில் செய்தியாளர்களிடம் அறிவித்தார். இடையில் தனது கட்சியின் அரசியல் குழுவை கலந்தாலோசித்து தான் இந்த முடிவை எடுத்தாரா, என்ற கேள்வி சமூக ஊடகங்களில் எழுப்பப்பட்டுள்ளது. இது வழமையான, சுமந்திரனை தாக்கும் திட்டத்தில் ஒரு பகுதியே என்று மறு சாரார் பதில் அளித்துள்ளனர்.

தமிழ் அரசு கட்சியின் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்த அடுத்த நாளே, அன்று நடைபெறும் கோவில் திருவிழாக்களில் மக்கள் பங்குபெறும் வகையில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் செயல்படவேண்டும் என்றும் சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார். வெள்ளிகிழமை, நல்லூர் முருகன் கோவிலிலும், மடுமாதா தேவாலயத்திலும் விழாக்கள் நடக்க இருந்தன.

அது போன்றே, ஒகஸ்ட் 15 ஆடி வெள்ளிக் கிழமை. அதுவும் ஆடி மாதம் கடைசி வெள்ளிக் கிழமை. எனவே, இந்து மதத்தினர், குறிப்பாக பெண்கள், அம்மன் கோவில்களில் சிறப்பு பூஜைகள் செய்வார்கள். எங்கேயோ விட்ட பிழையால், இந்த நாளின் முக்கியத்துவத்தை தமிழ் அரசு கட்சியின் தலைமையே மறந்து போனது என்பது சிரிக்க வைக்கிறது. சிந்திக்கவும் வைக்கிறது.

போததற்கு, வெள்ளிக்கிழமை தொடங்கி மூன்று தினம், யாழ்பாணத்தில் சர்வதேச புத்தக கண்காட்சி நடைபெற உள்ளதாகவும் அறிவிப்பு வெளியாகி உள்ளது. ஒரு காலத்தில் புத்தகப்புழுக்களாகஇருந்ததமிழ்இளைஞர்களின்தற்போதைய நிலைமை குறித்தும் கட்சி யோசித்துச் செயல்படவில்லையோ என்ற எண்ணமும் மேலோங்கி உள்ளது.

### கஜனுக்கு பதிலடி?

என்றாலும், சுமந்திரன் அல்லது தமிழ் அரசு கட்சியின் இந்தப் போராட்டம் தமிழர் உரிமை குறித்த விடயம் என்பதைவிட, செம்மணி புதைகுழி விவாகரத்தில் கஜேந்திரகுமார் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பிய கடிதத்திற்கான பதிலடி என்றே எண்ணத்தோன்றுகிறது. கடித விவகாரத்தில், கஜேந்திரகுமார் தன்னிச்சையாக முடிவெடுத்தார் என்று குற்றஞ்சாட்டிய தமிழ் அரசுத் தரப்பினர் சுமந்திரனின் இந்த அறிவிப்புக் குறித்து என்ன சொல்லப் போகிறார்கள்?

ஒன்றுமில்லை என்றாலும், பத்திரிகை செய்திகளை வைத்துப் பார்க்கும்போது, தமிழ் அரசுக் கட்சி கஜேந்திரகுமார் தரப்பினரைக் கலந்தாலோசித்ததாகத் தெரியவில்லை. இரு தரப்பினரின் அரசியல் அடாவடிகளை வைத்து பார்க்கும்போது, தமிழ் சமூகத்தின் கையறு நிலையில் அவர்களும் குளிர் காய்கிறார்களோ என்றே எண்ணத் தோன்றுகிறது. அதில், 'நான் பெரியவனா. நீ பெரியவனா?' என்ற போட்டி வேறு.

இதுவே, நேற்று, வியாழக்கிழமை, மன்னாரில், செல்வம் அடைக்கலநாதன் வகையாறாக்கள் முன்னெடுத்த காற்றாலை மற்றும் கனிம மணல் அகழ்விற்கு எதிரான போராட்டத்திற்கும் பொருந்தும். அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பத்திரிகை செய்தி மூலம் அழைப்பு விடுத்த செல்வம், அவர்களிடம் நேரடியாகப் பேசினாரா என்று தெரியவில்லை.

அதைவிட முக்கியமாக, அவர்கள் சார்ந்த கட்சி தலைமைகளிடம் செல்வம் பேச்சு நடத்தினாரா என்பதும் தெரியவில்லை. அவ்வாறு இல்லையென்றால், எவ்வாறு, அடுத்தடுத்த இரண்டு தினங்களில் இரண்டு தமிழ் கட்சிகள் தனிதனி போராட்டங்களுக்கு அழைப்பு விடுத்திருக்கும்? இது தான்தோன்றி தன அரசியல் இல்லை என்றால் வேறு எவ்வாறு அதனை கூறுவது?

### இதுவா பிரச்சினை?

இவை அனைத்தையும் வைத்து பார்க்கும்போது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் கூட்டத்தொடரை மனதில் நிறுத்தி மட்டுமே, இந்த தமிழ் அணிகள் போராட்டம் நடத்துகின்றன என்பது தெளிவு. அதில், இன்றைய கதவு அடைப்பு போராட்டம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் பகுதிகளில் எந்த அளவிற்கு மக்கள் ஆதரவை பெற்றுள்ளது என்பதும் குறித்துக் கொள்ளப்படவேண்டிய விடயம்.

காரணம், உள்ளாட்சி தேர்தல் வெற்றிகளுக்குப் பின்னர், தமிழ் மக்களிடையே தமிழ் அரசுக் கட்சியே பிரபலமான கட்சி என்ற எண்ணத்தை கட்டியெழுப்பும் முயற்சி நடந்து வருகிறது. அதில் உண்மையும் இருக்கிறது. இதுவே கடந்த வருட நாடாளுமன்ற தேர்தலுக்கும் பொருந்தும். ஆனால், இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்தில், அப்போதைய தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு கிடைத்த மக்கள் ஆதரவிற்கு இது கால் தூசு.

அதுவா இப்போது பிரச்சினை? மனித உரிமை பேரவைக் கூட்டத்திற்கு முன்னர், தமிழ் மக்களின் அவலநிலைக்கு விடை கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி இருந்தால், இந்தத் தலைவர்களும் அவர்களது கட்சிகளும் இப்படியா செயல்பட்டிருப்பார்கள்? மாறாக, ஒருங்கிணைந்து அல்லவா, ஒரு போராட்டத்தை முன்னெடுத்திருப்பார்கள்.

இவர்களது தனியாவர்த்தனங்கள், தமிழ் மக்கள் உரிமைகள் மற்றும் கவலைகள் குறித்தது அல்ல. மாறாக, தங்களில் யார் பெரியவர் என்று நிரூபிப்பதற்கு, தமிழ் மக்களையும் இனப்பிரச்சினையையும் பகடைக் காய்களாக பயன்படுத்துகிறார். இதில், தமிழ் அரசு கட்சிக்குள்ளேயே, தொடரும் சுமந்திரன்-சிறீதரன் ஆகியோரின் தனி கச்சேரி வேறு.

அந்த விதத்தில், செல்வம் அடைக்கலநாதன் முகம் கொடுக்கும் மன்னார் காற்றாலை போராட்டம் மட்டுமே மக்களின் தற்போதைய நிலமை மற்றும் கோரிக்கைகள் சார்ந்தது. அதுவும் அவரால் முன்னெடுக்கப்பட்டது அல்ல. அந்த பகுதியில் உள்ள பொதுமக்களால் தொடங்கப்பட்ட அந்த போராட்டத்தை செல்வம் 'ஹைஜாக்' செய்ய முயல்கிறார் என்று வாய்வழி செய்திகள் கூறுகின்றன.

உண்மையில், அந்த போராட்டத்தின் பின்னால் கத்தோலிக்க குருமார்கள் இருக்கிறார்கள் என்ற கருத்தும் உள்ளது. ஏன், மக்களின் போராட்டங்களின் முன் வரிசையில் அந்த குருமார்கள் தங்களது அங்கிகளுடன் காணப்படுகிறார்கள். அது போன்றே, மன்னார் போராட்டத்திற்கு ஆதரவாக வன்னியில் மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது. அதிலும் கத்தோலிக்க குருமார்களின் பிரசன்னமும் பங்களிப்பும் தெளிவாகத் தெரிந்தன.

### தலைமைகளின் 'லூட்டி'

எது எப்படியோ, இனப்பிரச்சினையை முன்னிறுத்தி இப்போதுதமிழ்தலைமைகள்தனித்தனியாகபோராட்டங்களை முன்னெடுப்பதற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளது. எதிர்வரும் மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில், தற்போது முடியவிருக்கும் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தை புதுப்பித்து, புதியதொரு தீர்மானத்தை இணை அனுசரணை நாடுகள் முன்னெடுக்கவேண்டும். அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாகவே இங்கே இந்தக் கூத்துகள் எல்லாம்.

தமிழ் தலைமைகள் என்னவோ, பூனை கண்ணை மூடி கொண்டால், உலகம் இருண்டுவிட்டது என்று இன்னமும் கருதி செயல்படுகின்றன. அதாவது, தாங்கள் தனிதனியாக முன்னெடுக்கும் போராட்டங்கள் இணை அனுசரணை நாடுகளை நம்ப வைக்கும் என்று எண்ணுகிறார்கள். அதாவது, இணை அனுசரணை நாடுகளுக்கும் சரி, சர்வதேச சமூகத்தின் மற்ற அங்கங்களுக்கும் இங்கே, வடக்கிலும் கிழக்கிலும் இவர்கள் அடிக்கும் லூட்டி தெரியவே தெரியாது என்பது போல அவர்கள் செயல்படுகிறார்கள்.

ஆனால், இந்த நாடுகள் அனைத்திற்கும் தலைநகர் கொழும்புவில் அவர்களது தூதரகங்களும் அதில் உயர் ஸ்தானிகர்களும் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்காக இங்கே செய்தி சேகரித்து அங்கே விற்பவர்களும் இருக்கிறார்கள். என்ன, இந்த செய்தி விற்பனர்களில் ஒரு சிலராவது உண்மை உரைப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

இது போதாது என்று, அந்த பன்னாட்டு ஸ்தானிகர்களும் அவர்களது அலுவலர்களும் தங்களுக்குள் அடிக்கடி சந்தித்து கருத்து பரிமாறி கொள்வார்கள். அப்போது, எந்த தமிழ் தலைவர், யாரிடம் சொல்வது உண்மை நிலைமையை ஒட்டி இருக்கிறது என்றும் தங்களுக்குள் சரி பார்த்துக் கொள்வார்கள். இது குறிப்பாக மேலை நாட்டு தூதராலய அதிகாரிகளுக்கு பொருந்தும்.

மரியாதை நிமித்தம், பெரும்பாலான தமிழ் தலைவர்களை அவர்கள் சந்தித்து கருத்து பரிமாறிக் கொண்டாலும், அதனால் அவர்கள் அனைத்து தமிழ் தலைவர்களையும் மதித்து நடத்துகிறார்கள் என்பதல்ல பொருள். இதுவே, தமிழ் தலைவர்களில் ஆங்கில புலமை பெற்றோருக்கும் பொருந்தும்.

### மனித கவசம்

இன்னும் சொல்லப்போனால், இந்த சர்வதேச சமூகத்தினர், தமிழர் தரப்பிற்கு வாக்கு கொடுப்பார்கள். அல்லது வாக்கு கொடுத்துள்ளதாக அவர்களை நம்ப வைப்பார்கள். ஆனால், உண்மையில், அவர்கள்தான் தமிழ் தலைமைகளை தங்கள் இஷ்டத்திற்கு ஆட்டிப் படைப்பார்கள். இந்த உண்மை புரிய தொடங்கும்போது கனகாலம் போயிருக்கும். தமிழ் தலைவர்களும் தங்களுடைய மக்களிடையே செல்லாகாசாகி இருப்பார்கள். தொடர்ந்து இதுதான் நடந்து வந்துள்ளது.

அந்த விதத்தில், இனப்போர் முடிந்த காலகட்டத்தில் கொழும்புவில் உள்ள மேலை நாட்டு தூதராலயங்கள் தனிப்பட்ட முறையில் கூறி வந்தது என்ன? கடைசிகட்ட போரில், சுமார் எட்டாயிரம் அப்பாவி தமிழ் மக்கள் மட்டுமே உயிரிழந்தனர் என்பதே அவர்களது தனித்தனியான கணக்கு. அதை அவர்கள் நம்பிக்கை உள்ளவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் தயங்கவில்லை. காரணம், அதுவே அவர்களுக்கு தெரிந்த உண்மை, களநிலை.

அது மட்டுமல்ல. இது குறித்து அரசிற்கு ஆதரவாக அவர்கள் காரணமும் முன் வைத்தனர். அந்த காரணங்களை அரச தரப்பே யோசித்து பார்த்திருக்கவில்லை. கொழும்பு தூதரங்களின் கூற்றின்படி, இறந்த அப்பாவி மக்களில் பலரும் வயோதிகாகளாகவும், ஓடியாட முடியாதவர்களாகவும் இருந்திருக்கலாம். எனவே, இலங்கை இராணுவம் மற்ற அப்பாவி தமிழர்களை விடுதலை புலிகள் அமைப்பின் பிடியில் இருந்து விடுவித்தபோது, அவர்களால் தப்பி ஓட முடியவில்லை. இந்த கதை ஒரு 'ரவுண்ட்' வந்தது.

அது மட்டுமல்ல. விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன், உலகில் எந்தவொரு தீவிரவாத தலைவரோ கொடூரமான சர்வாதிகாரியோ யோசித்துகூடப் பார்த்திராத வகையில், தங்களது 'மாவீரர்களின்' ஆதரவற்ற பெற்றோரையும் உற்றோரையும் தானே தன்னுடன் வைத்து காப்பது என்ற முடிவை ஒட்டியதே, அவர்களது கண்டுபிடிப்பு. அதாவது, முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, ஆதரவற்ற அந்த பெற்றோரை, தன்னுடனே அழைத்து செல்வதன் மூலம், பிரபாகரன் அவர்களை ஒரு மனித கவசமாகவே மாற்றி இருந்தார்.

ஒவ்வொரு போர் இழப்பிற்கும் பின்னர், இந்த மனித கவசங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது. இந்த உண்மையை, இனப்போரின் முடிவு கட்டம் முள்ளிவாய்க்காலைசென்றடைவதுவரை, அந்ததூதரகங்களும் அவர்களின் அரச தலைமைகளும் உணர்ந்திருக்கவில்லை. உண்மை அவர்களுக்கும் உறைத்தபோது, அவர்களால் அந்த அதிர்ச்சியில் இருந்து மீள முடியவில்லை.

அந்த விதத்தில், தொண்ணூறுகளில் புலிகள் அமைப்பு, யாழ்பாண நகர மக்களை இராணுவத்தினரிடம் இருந்து காப்பாற்றுவதாககூறிக்கொண்டுஅவர்களைவன்னிகாடுகளில் ஒளிந்துகொள்ளச் சொன்னதும் இதே காரணத்திற்காகத்தான். பின்னர் தங்களது தலைமையிடமான கிளிநொச்சி நகரை அது போன்றே மொத்தமாக காலி செய்து, அந்த மக்களையும் முள்ளிவாய்க்காலுக்கு விரட்டி சென்றதும் இதே கொடூர எண்ணத்தினால்தான்.

அப்போதெல்லாம், விடுதலை புலிகளின் இந்த முன்னெடுப்புகளை அவர்களின் ஆகச் சிறந்த போர் உத்தி என்று சிலாக்கித்த மேலை நாடுகளுக்கும் அவர்களின் பத்திரிகையாளர்களுக்கும் உண்மை உறைத்தபோது கன காலம் சென்றிருந்தது. என்றாலும், முள்ளிவாய்க்காலில் இருந்து, இராணுவம் சுமார் மூன்று இலட்சம் அப்பாவி மக்களை மீட்டது என்ற செய்தியை, அவர்கள், பயண கைதிகளின் கதையாகவோ அல்லது நிலையாகவோ மட்டுமே பார்த்தார்கள்.

இதன் காரணமாகவே, அவர்கள் கடைசி போரில், அப்பாவி தமிழர்களின் இறப்புகளையும் புள்ளிவிவரக் கணக்குகளின் அடிப்படையிலேயே கண்டார்கள். அதாவது, பயணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்ட மூன்று இலட்சம் மக்களில் சுமார் எட்டாயிரம் பேரே உயிரிழந்தனர். அதனை 2.6 சதவீத இழப்பாகவே அவர்களால் காண முடிந்தது.

அதுவே, பின்னர், பயண கைதிகளாக இருந்தவர்களின் எண்ணிக்கை சுமார் ஒன்றரை இலட்சம் மக்களே என்று கணக்கு மாறிய போது, இழப்பு கணக்கும் ஐந்து சதவீதம் என்று திருத்தப்பட்டது. மேலை நாடுகளின் கணக்குபடி, பிணை கைதிகளை மீட்கும் விடயத்தில், ஐந்து முதல் எட்டு சதவீதம் வரை மனித இழப்பு ஏற்றுக்கொள்ள கூடியதே. ஆனால், எப்போது, அமெரிக்கா உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகள், சீனாவை முன் நிறுத்தி தங்களது சர்வதேச அரசியலில் இலங்கையுடனான நிழல் போரில் ஆரம்பித்தார்களோ, அப்போதே முன்புகூறிய எண்ணிக்கைகள் மாற்றி எழுதப்பட்டன.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் உதவியுடன் அவரமைத்த தாருஸ்மான் குழுவின் கணக்குபடி, கடைசி போரில் இறந்த அப்பாவி மக்களின் எண்ணிக்கை நாற்பதாயிரமாக திருத்தி எழுதப்பட்டது.

இதனை ஒட்டி, முன்னர், கொழும்பு அமெரிக்க தூதரகத்தில் பணியாற்றிய இராணுவ அதிகாரியும் அவசர அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டார். சர்வதேச அரசியலில் இதுவெல்லாம் சாதாரணமப்பா!

## திருடர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியட்சகர் ஜெயமஹா தெரிவித்தார்.

அடுத்த வாரம் நல்லூர் ஆலயத்தில் விசேட உற்சவங்கள் இடம் பெற உள்ளன. அவற்றுக்காக பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோன்று ஆலயத்தில் பக்கதர்களிடம் திருடுவதற்கென்றே இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் திருட்டுக் கும்பல்கள், கொள்ளைக் கும்பல்கள் யாழ்ப்பாணம் வந்து தங்கியுள்ளன.

இந்த நிலையில், ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும் திருட்டுக்களைத் தடுக்கும் முகமாகவும் வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் இருந்து விசேட பொலிஸ் அணியினர் நல்லூர் ஆலயப் பாதுகாப்புக் என வரவழைக்கப்பட்டுள்ளனர். சிவில் மற்றும் சீருடையில் சுமார் 600 பொலிஸார் பாதுகாப்புக்கடமையில்ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என ஜெயமஹா தெரிவித்தார்.

அத்தோடுதென்பகுதிமற்றும்இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்து வரக்கூடிய - திருட்டுடன் தொடர்புடைய பல்வேறு சந்தேகநபர்களை இனங்காணத்தக்க பொலிஸ் அணியொன்றும் நல்லூர் ஆலய உற்சவத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். குறிப்பாக ஏற்கனவே பல திருட்டு சம்பவங்களும் தொடர்புடையவர்கள் தொடர்பிலான புகைப்படங்களும் ஆலய நுழைவாயில்களில் காட்சிப்படுத்தவுள்ளன எனவும், அவ்வாறு புகைப்படத்தில் காட்சிப்படுத்தப்பட்டவர்கள் யாராவது ஆலய வளாகத்தில்இனம்காணப்பட்டால்பொதுமக்கள் உடனடியாக பொலிஸாருக்குத் தகவல்களை வழங்குவதன் மூலம் உரிய சந்தேகநபர்களை விரைவில் கைது செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

நல்லூருக்குவரும்பக்தர்களின்பாதுகாப்பை உறுதிப்படுத்த பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும்என்றும்அவர்மேலும்தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com







வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
A1 A2 A3 A4 A5 A6 A7 A8 A9 A10 A11 A12 A13 A14
B1 B2 B3 B4 B5 B6 B9 B10 B11 B12 B13 B14 B15
C1 C2 C3 C4 C5 C6 C7 C8 C9 C10 C11 C12 C13
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## குரு புஷ்யத்தில் நல்லூர் அலங்கார ஷண்முகனின் குஞ்சித பாத தரிசனம்

நல்லூர் ஷண்முகப் பெருமானை நடராஜ மூர்த்தியாகவே பார்க்கும் மரபு உண்டு.

அதற்கேற்ப, சிதம்பரத்து நடராஜருக்கு பொன் வேயப்பட்ட சபை இருப்பது போல நல்லூரிலும் ஷண்முகப்பெருமானுடைய சபை பொன் வேய்ந்த கனகசபையாக இருக்கிறது.

அந்த சபையின் மஹா கும்பாபிஷேகம் கூட சிதம்பரம் தீக்ஷிதர்களால் நிகழ்த்தப்பட்டது.

ஆனந்தக்கூத்தரான நடராஜர் முதன் முதலில் வியாக்ரபாதர் – பதஞ்சலி முனிவர்களுக்காக ஒரு குரு புஷ்ய நாளில் திருநடனம் செய்தருளியதாக புராணங்கள் சொல்லுகின்றன.

### அது என்ன குரு புஷ்யம்?

சிலவாரங்களும்சிலநட்சத்திரங்களும்எப்போதாவதுசேரும். அப்படி சேரும் நாள் விசேஷமான நாளாகச் சொல்லப்படும்.

அந்த வகையில், புஷ்யம் என்ற பூச நட்சத்திரமும் குருவாரமான வியாழனும் சேரும் நாள் குருபுஷ்யம் என்று அழைக்கப்படுகிறது.

மிகவும்உயர்ந்தலக்ஷ்மிகடாக்ஷமான இந்நாளில் இம்முறை நல்லூர் ஷண்முகர் ஆடல் காண்பிக்க இருக்கிறார்.

அதாவது இந்த 21.08.2025 வியாழக்கிழமை குரு புஷ்ய நாளில் தான் இந்த ஆண்டுக்கான நல்லூர் தேர்த்திருவிழா



நிகழ இருக்கிறது.

நல்லூர் ஷண்முகர் மயில் மீது இருக்கும் கோலமுடையவர்.



அதனால் நடராஜ மூர்த்தி போல தனது இடது திருவடியை தூக்கி மேலே காண்பிப்பார். அதனால் இவரது குஞ்சிதபாத தரிசனம் சிறப்புடையதாக நல்லூரிலும் சொல்லப்படுகிறது.

நல்லூரில் நீண்ட காலமாக மஹோத்ஸவம் நடக்கிறது.

ஆரம்ப காலத்தில் ஷண்முகர் ஒரு தேரில் எழுந்தருளி உலாக்கண்டருளினார். ஆனால் அத்தேர் பழுதுற்றது.

1963 இல் இப்போதைய புதிய தேர் உருவானது. அப்போதைய கோயில் அறங்காவலர் குகஶ்ரீ ஷண்முகதாஸ் மாப்பாண முதலியார் இந்த தேரை ஒரு வருடத்துக்குள் உருவாக்கி வெள்ளோட்டம் விட வேண்டுமென விரும்பிப் பணி ஆற்றினார்.

திருவிடை மருதூர் இரா. கோவிந்தராஜு ஸ்தபதியாரின் தலைமையில் நான்கு தமிழக ஆசாரியாரிகளும் உள்ளூர் ஆசாரிமாரும் இணைந்து இத்தேரை உருவாக்கினர்.

குகஶ்ரீ. குமாரதாஸ்மாப்பாணமுதலியாரின்மேற்பார்வையில் நடந்த இப்பணிக்கு வவுனியா எம்.பி சுந்தரலிங்கம் தேவையான மரங்களைக் கொண்டு வந்து உதவினார்.

1964 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் திகதி இந்த ரத வெள்ளோட்டம் நடந்தது. அந்த ஆண்டு மஹோத்ஸவத்தில் ஷண்முகர் இத்தேரில் பவனி வந்தார்.

அக்காலத்தில் இத்தேர்த்திருப்பணிக்கு சுமார் ஒன்றே கால் இலட்சம் ரூபா முடிந்திருக்குமாம்.

இந்த தேரைச் செய்த கோவிந்தராஜு தான் நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையாரின் தேர் மற்றும் நல்லூர் கைலாசப்பிள்ளையாரின் தேர் ஆகியவற்றையும் செய்தவர். மிகுந்த திறமையானவர்.

நல்லூர் ஷண்முக நாதனின் திருத்தேர் திராவிட எண் கோண மரபிலானது. பார்விதானம், உபபீடம், அதிஷ்டானம், பேரூர் மட்டம், நராசன மட்டம், தேவாசன மட்டம், சிம்மாசன மட்டம் என்ற ஏழு தளங்களை உடையது. சிற்ப வரிகளை உடையது.

மேலே மணி மண்டபம், சொக்கட்டான் என்று நான்கு முதன்மை வாசல்களுடன் அமைய இருபது பவளக்கால்களால் தாங்கப்படும் விமானம் எட்டு பெரிய யாளிகளால் தாங்கப்படும் அமைப்புடையது.

மூன்று தளமுடைய மேல் விமானத்தின் மேல் கலசமும் உச்சிக்குடையும் காட்சி தருகின்றன.

கமலாகாரம்என்றபூவடிவதோற்றம்கொண்டநல்லூர்த்தேரில் குதிரைகள், பிரம்மா போன்ற அமைப்புக்கள் ஆரம்பத்திலேயே இல்லை. விமானத்தில் பறக்கும் கந்தர்வர்களும் இல்லை.

இங்கு பக்தர்களே குதிரைகள், அவர்களின் பக்தியே பிரம்மா என்று கொள்ளலாமோ?அறியோம்.

சிறப்பாக தேரின் விமான முன் பக்கத்தில் செவ்வேளின் ஆணையை வெளிப்படுத்தும் குக்குடம் ஆகிய சேவல் காட்சி தருகிறது.

வாழை, கரும்பு, இளநீர் போன்றவற்றை தேரில் கட்டும் வழக்கமும் நல்லூரில் இல்லை. கொடிகளாலும் மணிகளாலும் வாகை மாலைகளாலுமே தேர் அலங்கரிக்கப்படுகிறது.

அதனால் தேரின் மத்தியில் ஊஞ்சலில் ஆடி வரும் ஷண்முகநாதனின் தரிசனம் தெளிவாக கிடைக்கும்.

அந்த அளவில் இத் திருத்தேர் மிகவும் தனித்தன்மை பொருந்தியது.

தற்போதைய எஜமானரான குகஶ்ரீ சயந்தன மாப்பாண முதலியாரின் எண்ணக்கருவில் இத்தேரின் தரிப்பிடமான ரதாரோஹண மண்டபமும் தனித்துவமாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு செல்வ முத்துக்குமார சுவாமியும் முத்தங்கி சாத்தி எழுந்தருளியிருக்கிறார்.

'அலங்காரா நல்லூரா' என்ற கோஷம் முழங்க அழகிய தேரில் குரு புஷ்யத்தில் எழுந்தருளி ஆடல் செய்ய இருக்கிறான் எம்மான் நல்லூர் ஷண்முகன்.

அவன் குருவாய் வந்து அருளட்டும். எம் குறைகளை நீக்கிக் காக்கட்டும் என்று பிரார்த்திப்போம்.

**ஶ்ரீ சிவ ஶ்ரீ. தி.மயூரகிரி சிவாச்சார்யார்,**
**நீர்வேலி**

## தளர்விலா ராமகிருஷ்ண பரம ஹம்சர் !



உலகியல் வாழ்வை உளமதில் இருத்தா
உண்மை வாழ்வை உளமதில் இருத்தினார்
நிலமதில் நிஷ்டையில் நிம்மதி கண்டார்
தளர்விலா ராமகிருஷ்ண பரம ஹம்சர்

அன்புடை மனைவியை அன்னையாய் கண்டார்
அனைத்தும் அன்னை என்றே நினைத்தார்
பக்தியில் திளைத்தார் பகட்டை மறந்தார்
நித்தியம் சத்தியம் நினைந்தே வாழ்ந்தார்

ஞானம் அவரை நாடியே வந்தது
நல்லறி வவரிடம் நிறையவே சேர்ந்தது
சொல்லும் சொல்லும் வல்லமை ஆனது
கல்லா உள்ளமும் கரைந்தே போனது

ஞானம் தேடிப் பலரும் வந்தார்
ஆசி வழங்கி அணைத்துமே நின்றார்
அருமையாய் ஒருவர் சீடராய் அமைந்தார்
அவரே வீரத்துறவி விவேகானந்த ராவார்

குருவின் அருளால் குவலயம் முழுவதும்
சென்றார் சீடர் செப்பினார் தத்துவம்
ராம கிருஷ்ண இயக்கம் என்னும்
விருட்சம் வளர்ந்து வேதனை தவிர்த்தது

ராம கிருஷ்ணர் தத்துவம் அனைத்தும்
நமது வாழ்வுக்கு நற்றுணை ஆகும்
அவரை நினைப்போம் அவர்வழி நடப்போம்
அனைத்தும் சிறக்கும் அமைதி பெருகும் !



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண்- ஆஸ்திரேலியா**

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்




4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA




இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.08.2025இல் வெளியிடப்பெற்றது